தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1970 ஆகஸ்ட் 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 110, 111, 112 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

விருதுநகர் குடிநீர்த் திட்டம்.

* 113 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகருக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஏதும் போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனின், எப்போது போடப்பட்டது?

(உ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) விருதுநகர்க்கான குடிநீர் வழங்கு மேம்பாட்டுப் பணித் திட்டத்திற்கு 1959 மார்ச்சில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இப்பணி 1960 டிசம்பரில் தொடங்கியது.

(உ) தற்போதுள்ள நீர்ப்பங்கீட்டு அமைப்பை மாற்றியமைத்தல், நீர் வழங்கப்பெறாத இடங்களில் குழாய்களைப் போடுதல், கூடுதல் பணி நீர்த்தேக்கங்கள் கட்டுதல், கோடை சேமிப்பு நீர்த் தொட்டி அமைத்தல், தூயநீர் ஏற்றும் பெருங்குழாய் போடுதல், தொடக்க இடத்திலேயே நீர் எடுக்கும் ஏற்பாடுகளை அமைத்தல், வடிகட்டும் மேடையும், தூய்மைப் படுத்தப்படாத நீர் முதன்மைக் குழாயும் அமைத்தல் ஆகியவை இப்பணித் திட்டத்தின் நோக்கமாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், 1959-ம் ஆண்டு மார்ச் மாதம் போடப்பட்ட அந்தத் திட்டம், அர்ஜுன நதியிலிருந்து காளையார்குறிச்சிக் கண்மாய்க்குத் தண்ணீரைக் கொண்டுவந்து அதன் மூலம் சப்ளை செய்யும் திட்டமாகும். அப்பொழுதிருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் எதிர்ப்புத் தெரிவித்ததால் அது கைவிடப்பட்டது. பின்னால் 100 ஏக்கரா நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு,

அதற்காக 21 லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்ட அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அது எப்பொழுது நிறைவேற்றப்படும்? விருதுநகர்க் குடி தண்ணீர்த் தேவை எப்பொழுது பூர்த்தி செய்யப் படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1933-ம் ஆண்டிலிருந்து குடிநீர்த் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. அதை விரிவுபடுத்தி, அவர்களுடைய தேவைக்கேற்றபடி திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 1959-ம் ஆண்டில் 31 லட்சம் 44 ஆயிரம் ரூபாய்க்குத் திட்டமொன்று திட்டப் பட்டது. அதற்குப் பிறகு, 1960 டிசம்பரில் வேலை துவங்கப்பட்டது. மறுபடியும் அதில் சில நிலைமைகள் ஏற்பட்டதன் காரணமாக மறு ஆய்வு செய்யப்பட்டு விரிவுபடுத்தப்படும் நிலைமைகளும், கோடை சேமிப்பு நீர்த்தொட்டி அமைக்க வேண்டிய நிலைமைகள், குளம் ஒன்று அமைக்க வேண்டிய நிலைமைகளெல்லாம் ஏற்பட்டதன் காரணமாக 1962-ம் ஆண்டில் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, 53 லட்ச ரூபாய்க்குத் திட்டம் திட்டப்பட்டது. 53 லட்ச ரூபாய்த் திட்டம் தான் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகிறது. சீர்திருத்தம் செய்யப்பட்டுப் புதிதாக விரிவுபடுத்தப்பட்ட நீர் வழங்கும் ஏற்பாடுகள் முடிவடைந்துள்ளன. கோடைகால நீர்த் தேக்கம் நிறைவேறிவிட்டது. தூய நீரேற்றும் பெருங்குழாய் போடுதல் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : 1959-ம் ஆண்டு போட்ட திட்டத்தை மாற்றியதால் எவ்விதமான நன்மையும் இல்லை, அதனுல் விருதுநகர்க் குடிநீர்ப் பிரச்சினை தீரவில்லை என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆனுல், 1959-ம் ஆண்டில் 31 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டு, மறுபடியும் 1962-ம் ஆண்டில் மறுமதிப்பீடு செய்யப்பட்டு 53 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, அது அங்கீகரிக்கப்பட்டு, அதுதான் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப் படுகிறது. தூய நீரேற்றும் பெருங்குழாய் போடும் வேலை நிறைவேறிக்கொண்டிருக்கிறது. மற்றவைகள் நிறைவேறிவிட்டன. நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை முடிவடைந்தவுடன் குடிநீர் வழங்கும் முறையில் முழுமை ஏற்படக்கூடும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, விருதுநகர்க் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்காகச் செலவழிக்கக்கூடிய அந்த தொகை நகரசபை நிதியிலிருந்து செலவழிக்கப்படுகிறதா? அல்லது அரசாங்கம் மானியமாகவோ கடனுகவோ வழங்கியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே அதுபற்றிய தகவல் இல்லை. தனிக்கேள்வி போடவும்.